13.02.2024

**வா.சா. 1**

**திரு ராஜேந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

உயில் சொத்துக்களில் பாதி வேண்டுமென பரிகாரம் கோரி அசல் வழக்கு தொடர்ந்துள்ளேன். உயில் ஆவணத்தை என் அம்மா நவநீதம், என்னுடைய பாட்டி கண்ணம்மா ஆகியோர் எனக்கும் என் தம்பியான பிரதிவாதிக்கும் எழுதி கொடுத்துள்ளார். உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் நோட்ரி பப்ளிக்கால் பதிவு செய்யப்பட்டது. சார் பதிவாளர் அலுவலகத்தில் உயில் ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த உயில் ஆவணம் எங்கு ஏற்பட்டது என்றால் தஞ்சாவூரில் எழுதியுள்ளார்கள். உயில் ஆவணத்தை தயாரித்த வழக்கறிஞர் பெயர் தெரியவில்லை, தேவராஜ் என்று நினைக்கிறேன். உயில் ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். உயில் ஆவணம் தஞ்சாவூரில் எழுதியது என்று எனக்கு தெரியும். நான் அன்று வேலை பார்த்துக் கொண்டிருந்ததால் தஞ்சாவூருக்கு நான்

செல்லவில்லை. உயில் ஆவணத்தின் 3-வது பக்கத்தில் B ஷெட்டியூலில் கண்டுள்ளது என்னவென்றால் சாட்சி வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை பார்வையிட்டு B ஷெட்டியூலில் 1-வது நபருக்கு உள்ள பிரிபடாத பாதி பாகத்தையும் 1-வது நபருடைய ஆயுளுக்கு பிறகு 2-வது நபர் நவநீதம் அவர் ஆயுள் உள்ளவரை எந்த பாராதீனமும் செய்யாமல் அதன் வரும்படிகளை மட்டும் அடைந்து அனுபவித்து கொள்ள வேண்டியது என சொல்லப்பட்டுள்ளது என்கிறார். என் தகப்பனார் சிவானந்தம் செருமடார் என் தாயார் நவநீதத்திற்கு யார் யார் வாரிசுகள் என்றால் நான், என் அக்கா ஜெயலெட்சுமி, தங்கை வளர்மதி, பேபி, மாரியம்மாள் (எ) ராஜேஸ்வரி, வீரசிங்கம், ராமேஸ்வரி, மகாலெட்சுமி ஆகிய 8 பேர். என்னுடைய உடன் பிறந்த சகோதரிகளை தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணம் இருந்ததால் அவர்களை சேர்க்கவில்லை. என் தாயார் நவநீதத்திற்கு இந்த உயில் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் இல்லை. என் தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்கள் செருமங்கலம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை இந்த வழக்குரையில் குறிப்பிடவில்லை. என் தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்களை பொறுத்து பாகம் கேட்டு 26.10.2017 அன்று என்னுடைய சகோதரிகளுக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால்

சரிதான், 7 பேருக்கும் அனுப்பியுள்ளேன். உயில் சொத்துக்களை பொறுத்து என்னுடைய தாயார் சம்மதத்துடன் 2009 ஆம் வருடம் சொத்துக்களை 3-ம் நபருக்கு விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். என் சம்மதத்துடனும் என் தம்பி சம்மதத்துடனும் சொத்துக்களை எங்களுடைய இரு தங்கைகளின் திருமணத்திற்காக விற்றுள்ளோம். சொத்துக்களை விற்றதில் என் தம்பிக்கு சம்மதம் இல்லாததால் மேற்படி கிரயம் செல்லாது என மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் நீதிமன்றத்தில் வழக்கு நடத்தி வருகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI Digitally signed by M SHANTHI DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN Date: 2024.02.13 17:11:12 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவாரூர்.